Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 21 | 04-06-2003 | புதன்கிழமை | ஓசை 106

உங்களுக்கு உதவுவோம் வாருங்கள்
அச்சகங்கள் அலுவலகங்கள் மாணவர்களுக்கு
சாணக்கியா
அச்சுப் பொருட்கள்
காகிதாதிகள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

# டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பில்லை

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து அரசாங்கத்தின் பதிலின்மையே காரணம்

(கிளிநொச்சி)

**இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்குவது தொடர்பாக ஆக்கபூர்வமான பதில் ஒன்றைச் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அளிக்காததைத் தொடர்ந்து டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு இல்லாது போயுள்ளது எனப் புலிகளின் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.**

இம்மாதம் 9ஆம் 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றப் போவதில்லைஎனத் தெரியவருகின்றது.

யுத்தத்தினால் பாதிப்புற்ற தமிழர் தாயகப் பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கென விடுதலைப் புலிகளின் அதிக பங்களிப்புடன் கூடிய போதிய அதிகாரம் மற்றும் சட்டவலுவைக் கொண்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பொன்றை விடுதலைப்புலிகள் கோரி யிருந்தனர்.

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடைக்கால நிர்வாகக் கூட்டமைப்புக் குறித்துஎதுவும் பேசாததோடு புனர்வாழ்வு அபி

(08ஆம் பக்கம் பார்க்க).

## அமைச்சர் சந்திரசேகரன் வெள்ளியன்று கிளி. வருகிறார்



சிறிலங்காவின் அமைச்சர் சந்திர சேகரன் நாளை மறுதினம் கிளி நொச்சிக்கு வருகை தந்து தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளார்.

இதேவேளை இந்த விஜயம் குறித்து கொழும்புத் தகவல் தெரிவிக்கையில் : அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து ஏற்பட்டுள்ள இடைவெளியைக் குறைக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து அமைச்சர் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று கூறப்படுகிறது.

## விடுதலைப்புலிகளின் பதில் இன்று அனுப்பி வைக்கப்படும்

தனது புதிய பிரேரணைகள் தொடர்பாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிய இரண்டாவது கடிதத்திற்கான விடுதலைப்புலிகளின் பதில் இன்று அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இப்பதில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களால் நோர்வேத் தரப்புக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

தனது புதிய பிரேரணைகள் தொடர்பாக விளக்கமளித்து கடந்த முதலாம் திகதி நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் அவர்களூடாக அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு சிறிலங்காப் பிரதமர் விக்கிரமசிங்க அனுப்பிய கடிதத்திற்கான பதிலே இன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது.

## யாழ். பழைய பூங்காப் பகுதியில் புதிய படைத்தளம் அமைப்பு

(வடமராட்சி)

யாழ்.செயலகத்தின் முன்பாக உள்ள பழைய பூங்காப் பகுதியில் புதிதாக படைத்தளம் ஒன்றினை அமைக்கும் முயற்சியில் படைத்தரப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையினை நேற்று முதல் படையினர் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஆறு வருடங்களாக மனித நடமாட்டம் அற்ற மிதிவெடிப் பிரதேசமாகக் காணப்பட்ட இப்பகுதியில் கண்ணிவெடி, மிதிவெடிகளை அகற்றி அப்பகுதியினைத் துப்புரவு செய்யும் பணியினை படையினர் ஆரம்பித்துள்ளனர். படைத்தளம் அமைக்க படையினர் எடுத்து வரும் இந்நடவடிக்கையினை யாழ்மாவட்ட வெகுசன அமைப்புகளின் ஒன்றியம் கண்டித்துள்ளது. (27)

## தமிழ்க் கூட்டமைப்பு மீண்டும் பிரதமர் ரணிலுடன் பேச்சு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று மீண்டும் சிறிலங்கா பிரதமரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இந்தச் சந்திப்பின் பொழுது வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர் வாகசபை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து அவர்கள் பிர தமரிடம் கருத்துக் கூறி உள்ளனர்.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுக்கான கட்டமைப்புத் தொடர்பாக சிறிலங்கா அரசு பரிந்துரைத்துள்ள யோசனைகளை விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை என்றும் எனவே இடைக்கால நிர்வாக சபையை வடக்கு - கிழக்கில் ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் சட்டச்சிக்கல்கள் இருப்பதாக சிறிலங்கா பிரதமர் சுட்டிக்காட்டிய நிலையில் அவர்கள் சட்டமா அதிபரையும் இது தொடர்பாக சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

## - பொலிகண்டி கடற்பரப்பில் - மீன் பிடிக்கச் சென்ற இருவரைக் காணவில்லை

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு பொலிகண்டி கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற இருவர் காணாமற் போயுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மீன்பிடிக்க மூன்று மீனவர்கள் சென்றுள்ளனர். மீன்பிடிப்படகின் வெளியிணைப்பு இயந்திரம் பழுதடைந்தமையடுத்து இவர்களில் ஒருவர் வேறு ஒரு மீன்பிடி படகு மூலம் கரைக்கு வந்து இயந்திரத்தை திருத்தம் செய்து கொண்டு சென்ற போது அவர்கள் இருவரும் குறிப்பிட்ட இடத்தில் இருந்து காணாமல் போய்விட்டனர்.

நேற்று இரவு வரை தொடர்ந்தும் கடலில் தேடுதலில் மீனவர்கள் ஈடுபட்ட போதும் இவர்கள் மீட்கப்படவில்லை. (27)

## புலிகள் கலந்துகொள்ளாவிடின் ஜப்பானுக்கு ஏமாற்றமளிக்கும்

### ஜப்பானிய மூத்த அதிகாரி கருத்து

(லண்டன்)

இலங்கைக்கு உதவிவழங்கும் டோக்கியோ மாநாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் கலந்துகொள்ளவில்லையென்றால் ஜப்பானுக்கு அது ஒரு ஏமாற்றமே என ஜப்பானிய மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

வரும் 9ஆம் 10ஆம் திகதிகளில் இம் மாநாடு நடைபெறவுள்ளது. விடுதலைப்புலிகள் கலந்துகொண்டாலும் சரி கலந்துகொள்ளாவிட்டாலும் சரி திட்டமிட்டபடி மாநாடு நடைபெறும் என ஜப்பான் அரசு அறிவித்துள்ளது தெரிந்ததே.

## கொழும்புக் கோட்டை உயர்பாதுகாப்பு வலயம் மேலும் விஸ்தரிப்பதென அரசாங்கம் முடிவு

(கொழும்பு)

கொழும்பு கோட்டைப் பகுதியில் உள்ள பாதுகாப்பு வலயம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

லோட்டஸ்வீதி, ஜோக்வீதி, சனாதிபதி பிரதேச செயலகம் ஆகிய வற்றை உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளாக விஸ்தரிக்க சிறிலங்காவின் படைத்துறை அமைச்சு முடிவு செய்துள்ளது.

கோட்டை குற்றப்புலனாய்வு தலைமையகத்துக்கு முன்னால் வைத்து மாகாண அமைச்சர் ரஞ்சித் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இன்னும் ஓரிரு தினங்களில் வர்த்தமானிமூலம் உயர் பாதுகாப்பு வலயவிஸ்தரிப்புத் தொடர்பாக அறிவிக்கப்படும்.

## வடமராட்சியில் இருவர் பொலிசாரால் கைது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் இரண்டு பேர் சிறிலங்காப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வடமராட்சி சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சங்கத்தலைவர் மற்றும் உப தலைவர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் கைது நடவடிக்கையின் பின்னணியில் அரசியல் தலையீடு இருப்பதாக கூறப்படுகின்றது.

# சூழலைப் பேணி தேசத்தைக் காத்திட பொருண்மிய மதியுரையக அறிவுரைகள்!

உலக சூழல் ஜூன் 5 ஆம் திகதியை முன்னிட்டுப் பொருண்மிய மதியுரையகம் "சூழலைப் பேணுவோம் தேசத்தைக் காப்போம்" என்னும் தலைப்பில் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டது.

இப்பிரதேசத்தில் சூழலைப் பேணப் பத்துக் கட்டளைகளை அது குறிப்பிட்டுள்ளது.

அவையாவன:-

*மரங்களை நாட்டுவோம்.
*வளத்தைப் பாதுகாப்போம்.
*கண்டல்களைப் பாதுகாப்போம்
*நீரைச் சிக்கனமாகப் பாவிப்போம்.
*நன்னீரைச் சுத்தமாக வைத்திருப்போம்.
*மண்ணரிப்பை நிறுத்துவோம்.
*சுற்றாடலைச் சுத்தமாக்குவோம்.
*வீதியில் குப்பைகளைத் தடுப்போம்.
*பொலித்தீன் பாவனையைத் தவிர்ப்போம்.
*கழிவுகளை உரமாக்கி மீள்பாவனையை ஊக்குவிப்போம்.

### வனங்களைப் பாதுகாப்போம்

ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் நிலப்பரப்பில் மிகக்குறைந்த பட்சம் 30 விகிதமாவது வனமாக அமைய வேண்டும் இருபது வருட கால யுத்தத்தினால் எமது வனங்களும் மரங்களும் அழிக்கப்பட்ட நிலையில் நாம் எமது சூழலை மீளக் கட்டியெழுப்பவேண்டிய நிலையில் உள்ளோம். ஒவ்வொரு மரத்தினாலும் நாம் அடையக்கூடிய பலன் அளப்பெரியது. மரமொன்றின் நிழலிலிருந்து பத்துக் குளிர்சாதனப் பெட்டிகளூடாகக் கிடைக்கும் குளிர்ச்சியை அடையலாம் ஒரு ஏக்கரில் வளரும் மரங்கள் ஒரு வருடத்தில் வெளியிடும் உயிர்வாயு பதினெட்டுப் பேருக்குப் போதுமானது. நாம் சுவாசிக்கும் காற்றை சுத்தமாக்குவதிலிருந்து அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பல அத்தியாவசியப் பொருட்களையும் மரங்களிலிருந்தும் வனங் களிலிருந்துமே பெறுகின்றோம்.

போர்க்காலத்தில் எமது வனங்களில் கணிசமான பகுதிகள் குண்டு வீச்சினால் அழிக்கப்பட்டதுடன் பல்லாயிரக் கணக்கான மரங்களும் வெட்டியழிக்கப்பட்டன வெட்டப்பட்ட மரங்களை ஈடுசெய்யவும் எமது வனவளத்தை கட்டியெழுப்பவும் எதிர்கொள்ளபொருளாதார வளர்ச்சக்குத் தேவையான மரங்களை வளர்த்தெடுக்கவும் நாம் பாரிய மர நடுகைத் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதன் மூலமே அடைய முடியும். இதன் அடிப்படையில்,

வெட்டியழிக்கப்பட்ட ஒவ்வொரு மரத்திற்கு ஈடாக நான்கு மரங்களை நடுவோம். எமது வீடுகள் ஒவ்வொன்றிலும் ஜூன் 5முதல் 19 வரையான காலப் பகுதியில் மூன்று பழ மரங்களையும் பயன் தரும் வேம்பு போன்ற மர மொன்றையும் நடுவோம். எமது கிராமத்தின் பொதுவான தரிசு நில மொன்றில் வனமொன்றை உருவாக்குவோம். பரிசொன்று வழங்கும் போது மரமொன்று வழங்குவோம். சுற்றத்தாரோடு சேர்ந்து வீதிநெடுக மரம் நடுவோம்.

வீதியோரங்களில் நடப்பட்டுள்ள மரங்களுக்கு நீரூற்றி பேணுவோம்.

அரிதாக, குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே வளரும். மரங்களையும், தாவர வகைகளையும் பாதுகாப்போம்.

# அனுமதியின்றி மணலேற்றும் நபர்கள் மீது நடவடிக்கை

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் அனுமதியின்றி மணல் ஏற்றுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

வட்டக்கச்சிப் பகுதி வீதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் கூடுதலாக இரவு வேளைகளில் மணல் ஏற்றுவதாக வும் தெரியவந்துள்ளதுடன் அனுமதி யின்றி மணல் ஏற்றுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதிச் சிட்டை இல்லாத வாகனஉரிமையாளரின் வாகனம் தடுத்துவைக்கப்பட்டு குற்றப்பணம் அறவிடப்படவுள்ளது. கரைச்சிப் பிரதேச சபை செயலகத்தல் அனுமதியைப் பெற்று உரிய இடத்தல் மணல் ஏற்றுமாறும் அதுமதியின்றி ஏற்றுவோருக்கு தமிழீழ காலல்துறையினர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (12)

# தியாகி திலீபன் மருத்துவமனையில் 1714 பேருக்குச் சிகிச்சை

வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் வெளி நோயாளர் பிரிவில் சென்ற மாதம் 1714 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வைரஸ் காச்சலுக்கு 264 பேரும் மலேரியாவுக்கு 107 பேரும், மூளை மலேரியாவுக்கு 02 பேரும், சுவாச வழித் தொற்றுக்கு 164பேரும், தொய்வுக்கு 76 பேரும், பாம்புக் கடிக்கு 03 பேரும், உயர் குருதி அமுக்கத்திற்கு 14 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். அத்துடன் வாரத்தில் ஒருநாள் மாமுனை பிரதேசத்தில் நடமாடும் மருத்துவ சேவையும், கேவில் பிரதேசத்தில் ஒரு நாள் நடமாடும் மருத்துவ சேவையும் நடைபெற்று வருகிறது.

நடமாடும் மருத்துவ சேவையினால் 452 பேருக்குச் சிகிச்சை அளிக் கப்பட்டுள்ளது. (11)

# கிளி.அக்கராயன் ம.வி.யில் ஆசிரியர்கள் பற்றாக்குறை

(அலுவலக செய்தியாளர்)

கிளி.அக்கராயன் மகா வித்தியாலயத்தில் 56 ஆசிரியர்கள் தேவையான நிலையில் 21 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர்.

மேற்படி பாடசாலையில் 1029 மாணவர்கள் கல்விகற்று வரும் நிலையில் ஆரம்பக் கல்விக்காக 13 ஆசிரியர்கள் தேவையான விடத்து மூன்று ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். விஞ்ஞானப் பாடத்திற்கு ஆசிரியர் இல்லாதுள்ளது.

கணித பாடத்திற்கு நான்கு ஆசிரியர்களும் விஞ்ஞான பாடத்திற்கு நான்கு ஆசிரியர்களும் ஆரம்பக்கல்வி ஆங்கில ஆசிரியர்கள் இரண்டு பேரும் மேல் வகுப்புக்களுக்கு நான்கு ஆங்கில ஆசிரியர்களும் தேவையாகவுள்ளது. அத்தோடு கணித பாடத்திற்கு நிரந்தர ஆசிரியர்கள் என்ற வகையில் ஒருவர் மட்டுமே கடமையில் உள்ளார். (பா)

## தற்கொலை

(அலுவலக செய்தியாளர்)

பெண் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்றுக் காலை 10 மணியளவில் அக்கராயன் மணியங்குளம் என்ற இடத்தில் மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது. நகுலேஸ்வரன் யோகம்மா (வயது - 32) என்பவரே இவ்வாறு தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இது தொடர்பான மரணவிசாரணைகள் கிளி. அக்கராயன் காவல் பணிமனையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (பா)

# - உயர் நீதிமன்றத்தீர்ப்பையடுத்து - மூன்று மாகாண முதலமைச்சர்களுக்கு நிதி ஒதுக்கீட்டை நிறுத்த அரசு முடிவு

(கொழும்பு)

வடமத்திய மாகாணம், தென்மாகாணம் மற்றும் மேல் மாகாணங்களின் முதலமைச்சர்களுக்கான நிதி ஒதுக்கீட்டை நிறுத்த சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் சனாதிபதிக்கும் இடையிலான விரிசல் மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்பிரகமுவ மாகாண முதலமைச்சர் சமரவீர வீரவன்னியின் நியமனம் குறித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதையடுத்தே மேல் மாகாணம், வட மத்திய மகாணம், தென் மாகாணம் ஆகியவற்றுக்கான முதலமைச்சர்களின் நிதியை அரசாங்கம் நிறுத்தியுள்ளது. மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாதவர்களை மாகாண முதல மைச்சர்களாக நியமிப்பது சட்ட ரீதியற்றது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் திணைக்கள பதவி உயர்வு முற்றாகச் சீர்குலைவு நிலையில்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தில் பதவி உயர்வுகள் குறித்த நடவடிக்கைகள் முற்றாகச் சீர்குலைந்திருப்பதாக சிறிலங்கா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் பதவி உயர்வு வழங்கும் நடைமுறை சரியாகப் பின்பற்றப் படாததினாலேயே இந்த நிலைமை உருவாகியுள்ளது.

பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருந்த போதும் சிபார்சும் அரசியல் செல்வாக்கும் பொலிஸ் சட்டதிட்டங்களை நடைமுறைப் படுத்த இடங்கொடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கிளி.மாவட்ட வயல்களில் சந்துக்குத்தியின் தாக்கம்

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெல் வயல்களில் சந்துகுத்தியின் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது.

சந்துகுத்தியின் தாக்கம் இளம்பருவத்தில் 15-30 நாள் வயதிலும் கதிர் உருவாகும் காலத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இந்நோயை கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் நெல் வயலில் நீர் மட்டத்தை ஒரு அங்குலம் வரை குறைத்து குறேற்ரர் 3%, டயசினோன் 3%, பிறின்ஸ் 5% போன்றவற்றையும் குளோறி பைறிபொஸ், பென்தோயேற் குயினல் பொஸ் ஆகிய திரவ நாசினிகளைப் பயன்படுத்துவதன் மூலம் கட்டுப்படுத்தலாம். இந்நோய் தொடர்பான மேலதிக விபரங்களை பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் என கிளிநொச்சி உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்றத்திற்கு மலர்வளையத்துடன் பொ.ஐ.மு.பா.உக்கள் வருகை

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்று பாராளுமன்றத்திற்கு சமுகமளிக்கும் போது மலர் வளையங்களுடன் சமுகமளித்தனர்.

பாராளுமன்றம் காலை 10.00 மணிக்கு கூடிய போது வாய் மொழி மூலமான கேள்விகளுக்கு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க பதிலளிக்க ஆரம்பித்த போது, பொ.ஐ.முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மலர்வளையங்களுடன் வருகை தந்தனர். அத்துடன் கைகளில் கறுப்புப்பட்டி அணிந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனையடுத்து பாராளுமன்றத்தில் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டது.

இதனால் பாராளுமன்றம் அரை மணித்தியாலம் ஒத்திவைக்கப்பட்டது.

பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்பட்டதையடுத்து உரையாற்றிய சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா பொ.ஐ.முன்னணியினரின் இந்த நடவடிக்கை குறித்து கண்டித்துள்ளதோடு அந்த உறுப்பினர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

## இன்று அந்தோனியார் ஆலய கொடியேற்றம்

ஜெயந்திநகர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து ஒவ்வொரு நாளும் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகி நவநாள் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும். எதிர்வரும் 12ம் திகதி மாலை 6.00 மணிக்கு ஆரா தனை (வெஸ்பர்ஸ்) இடம்பெறும்.

13 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு புனித அந்தோனியாரின் திருநாள் திருப்பலியும், திருச்சுருப வீதிப்பவனியும் இடம்பெறும் என்பதை பங்குத்தந்தை ஞானேந்திரன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

## வீதி புனரமைப்பு

(பள்ளிக்குடா)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் பூநகரி பள்ளிக்குடாவில் மணற்காடு வீதிப் புனரமைப்பு நேற்றுமுன்தினம் காலை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் 70 குடும்பங்கள் கலந்துகொண்டன. வீதித் திருத்தவேலை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (29)

## மகோற்சவம்

(வட்டக்கச்சி)

இராமநாதபுரம் மாவடிப் பதி மாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை ஆரம்பமாகவுள்ளது. மேற்படி உற்சவம் நாளை நண் பகல் 11.52 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி 14ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் முடிவடைய வுள்ளது. (12)

## வருடாந்த உற்சவம்

கறுக்காய்த்தீவு கலவெட்டித்திடல் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் வலம்புரி இராணுவ நடவடிக் கையின் பின் இம்முறை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இன்று இறுதிநாள் உற்சவமாகும். (29)


## துயர் பகிர்வோம்

கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலய முதல்வர் திரு.க.இரட்ணகுமார் அவர்களின் மாமியாராகிய முத்துசாமி இராசமணி அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து இப்பிரிவுத்துயரால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அத் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஆசிரியர் ஒன்றியம்,
கல்விசாரா ஊழியர்,
மாணவர்கள்.
கிளி/இராமநாதபுரம் ம.வி.

(3305)



## திருமண வாழ்த்துக்கள்

இல்லற வாழ்வில் இணையும் 02.06.2003
எமது நிறுவனப் பணியாளரான
சிவலோகநாதன் அவர்களையும் அவருடைய
துணைவியார் விகிர்தா அவர்களையும்



இன்று போல் என்றும் பொலிவுடன் திகழ
இனியதோர் உலகம் உமக்குள்ளே அமைய
அன்புடன் அறிவும் அரியதோர் பண்பும்
இருவரும் பெற்று இனிதே வாழ்ந்திட
உள்ளம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

இனிதே வாழ்த்தும்
ஈழநாதப் பணியாளர்கள்.

# ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லை

# ஹான்ஸ் பீலிக்ஸ் இறுதி அறிக்கை வலியுறுத்து!

## மாத இறுதியில் பதவி விலகவும் முடிவு

**பாரிய அழிவைத்தரும் ஆயுதங்கள் ஈராக்கில் உள்ளனவா என்பது சம்பந்தமான சோதனையை நடத்தி வந்த ஐக்கிய நாடுகள் ஆயுதப் பரிசோதகர்கள் தமது அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.**

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

சோதனையாளர்களின் தலைவரான ஹான்ஸ் பீலிக்ஸ் நாற்பத்து ஐந்து பக்கங்களைக் கொண்ட அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றுகையில்;

இதுவரை இடம்பெற்ற சோதனைகளில் பாரிய அழிவைத் தரும் ஆயுதங்கள் ஈராக்கில் கண்டு பிடிக்கப்படவில்லை என்று கூறினார்.

இம்மாத இறுதியளவில், தான் பதவி விலகப் போவதாகத் தெரிவித்த அவர் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய நாடுகள் ஆயுத சோதனையாளர்கள் குழுவில் முப்பது அங்கத்தவர்கள் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் நியூயோக்கில் தற்சமயம் தங்கி உள்ளனர்.

கோரிக்கை விடுக்கப்பட்டதும் இரண்டு வார காலத்தில் அவர்கள் சோதனை நடவடிக்கைகளை ஆரம்பிப்பர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



பாக்தாத்தில் அரும்பொருள் காட்சிச்சாலை கட்டடத் தருகே நிலையெடுத்துள்ள அமெரிக்க இராணுவ டாங்கி



வேலை நீக்கப்பட்ட ஈராக்கிய இராணுவ வீரர்கள் பாக்தாத்திலுள்ள அமெரிக்க இராணுவத் தலைமையகத்தின் முன் தங்களது கொடுப்பனவுகளை வழங்குமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றார்கள்.



நேபாள மன்னர் பரம்பரையினர் படுகொலைச் சம்பவத்தின் உஆவது வருட நினைவு நாளில் மாணவர்களும் எதிர்க்கட்சிகளும் மன்னர் கயேந்திராவிடம் அரசியல் திருத்தத்துக்கு அழுத்தம் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

# முகாபே அரசை பதவி விலகக் கோரி

# எதிர்க்கட்சிகள் தொடர் போராட்டம்!

சிம்பாவ்வேயின் பிரதான எதிர்க்கட்சித் தலைவரான மோகன் சமுங்திரால் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரொபேட் முகாபேயின் அரசுக்கு எதிராக சிம்பாவ்வேயில் நடந்து வரும் போராட்டங்களின் பின்னணியில் கைது செய்யப்பட்ட இவர் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

இதனிடையே ரொபேட் முகாபே தலைமையிலான அரசை பதவி விலகக் கோரி எதிர்க்கட்சிகள் நடத்தி வரும் போராட்டத்திற்குப் பரவலாக மக்களின் ஆதரவு கிடைத்து வருகின்றது.

சிம்பாவ்வேயின் தலைநகரில் இடம்பெற்ற போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கண்ணீர்ப் புகை குண்டுகளைப் பயன்படுத்தி சிம்பாவ்வே பொலிசார் விரட்டி உள்ளனர்.

இதேபோன்று சிம்பாவ்வேயின் பல பகுதிகளில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் படையினருக்கும் இடையே மோதல்கள் இடம் பெற்றுள்ளன.




ஜொகான்ஸ்பேர்க் நகரில் நடந்த சிம்பாவ்வே நாட்டின் எதிர்க்கட்சிகளின் கூட்டம் ஒன்றின் போது "முகாபேயை வெளியேறச் சொல்" என்ற வாசகத்திற்கருகே உணவருந்தும் தென்னாபிரிக்கர் ஒருவர்.

# அணுவாயுதத் திட்டங்களை வடகொரியா கைவிடும்!

## அமெரிக்கா நம்பிக்கை

வடகொரியா அதன் அணுவாயுத உற்பத்தித் திட்டங்களை திட்டவட்டமாகக் கைவிடும் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

வடகொரியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட அமெரிக்க விசேட தூதுவர் அங்கு நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வடகொரியத் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளுடனான அமெரிக்கத் தூதுவரின் சந்திப்பு வட கொரியாவின் பியோங்ஜாங் நகரில் இடம் பெற்றது.

இதேவேளை, வடகொரியா மீது எவ்வித தாக்குதலும் மேற்கொள்ளக் கூடாது என்றும் அது பற்றி அமெரிக்கா உறுதி அளிக்க வேண்டும் என்றும் வடகொரியா கோரியுள்ளது.

இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் பட்சத்தில் வடகொரியா அதன் அணுவாயுதத் திட்டத்தைக் கைவிடும் என்று வடகொரிய நாட்டுத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

## அத்வானிக்கு அழுத்தம்

(புதுடில்லி)

அயோத்தியில் சர்ச்சைக்குரிய கட்டடம் இடிக்கப்பட்டது தொடர்பாக துணைப் பிரதமர் எல்.கே. அத்வானிக்கு எதிராக சி.பி.ஐ. கூடுதல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருப்பதையடுத்து அவர் பதவி விலக வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கோரியுள்ளது.

# செவ்வாய்க் கிரகத்தை ஆராய விண்வெளி ஓடம் பயணம்

செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்கான ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் விண்வெளி ஓடம் ரஷ்ய விண்வெளி நிலையத்திலிருந்து ஏவப்பட்டுள்ளது.

பூமியில் இருந்து செவ்வாய்க் கிரகத்தைச் சென்றடைவதற்கு ஆறு மாதங்கள் செல்லும்.

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் உள்ளனவா? என்பதையும் நீர்வளம் உள்ளதா? என்பது பற்றியும் கண்டறிவதே இந்த விண்வெளி ஓடத்தின் நோக்கமாகும்.

'வீகிள்ஸ்-2'எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ஓடத்திலிருந்து ஆறு மாதகாலத்திற்குத் தகவல்களை விஞ்ஞானிகள் பெற்றுக் கொள்வார்கள்.

சூரியன், பூமி, செவ்வாய்க் கிரகம் என்பன ஒரே கோட்டில் வரும் சமயத்தில் செவ்வாய்க் கிரகத்தை ஆராய்ச்சி செய்யும் விண்வெளி ஓடங்கள் அனுப்பப்படுவது வழக்கமாகும்.

இருபத்தாறு மாதங்களுக்கு ஒரு தடவை இத்தகைய நிலைப்பாடு ஏற்படுவதாக விண்வெளி விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே முப்பது செவ்வாய்க்கிரக பிரயாணங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ள போதிலும் மிகச் சில பிரயாணங்களே வெற்றி கண்டுள்ளன.



நாசா விண்வெளி ஆய்வு நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள "செவ்வாய்" கோளின் புகைப்படம் – புவியிலிருந்து ஏறக்குறைய 43 மில்லியன் மைல் தொலைவில் இது காணப்படுகிறது.

# ஆயுதப் பரவலைத் தடை செய்யும் முயற்சிக்கு ஜி-8 நாடுகளின் தலைவர்கள் முன்னுரிமை!

## இரு நாள் மாநாட்டில் முக்கிய தீர்மானம்

ஆயுதப்பரவலைத் தடை செய்ய ஜி-8 நாடுகளின் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இரு நாட்கள் நடைபெற்ற ஜி-8 நாடுகளின் மாநாட்டில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஏற்றுமதித்தடை, ஆயுதப் பரிசோதனை ஆகியவற்றைப் பயன்படுத்தி ஆயுதப் பரவலைத் தடை செய்ய வேண்டும் என்று தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக அணுவாயுதம் மற்றும் ஏவுகணைகள் தயாரிக்கப்படுவதை மட்டுப்படுத்த வேண்டும் என்றும் வடகொரியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும் என்றும் ஜி.8 நாடுகளின் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த மாநாட்டின் போது ஈராக் மீதான போரில் முரண்பட்ட கருத்துக்களை கொண்டிருந்த அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் சனாதிபதிகள் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்

இதேவேளை ஜி-8 நாடுகளின் மாநாட்டுக்கு எதிராக உலகமயமாக்கல் எதிர்ப்புக் குழுவினர் ஆர்ப்பாட்டங்களை நடத்தி உள்ளனர்.

ஏழைமக்களுக்கு ஜி-8 நாடுகளின் மாநாடு எந்தவித நலனையும் ஏற்படுத்தப் போவதில்லை என்றும் அவர்கள் கோரியே இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்தி உள்ளனர்.

# உயர் நீதிமன்றத்தீர்ப்பினால் மாகாண முதலமைச்சர்கள் சிலரின் பதவி பறிபோனது!

**மாகாண** சபைக்கு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுவது தொடர்பாக சிறிலங்காவின் உயர் நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பு பல மாகாண சபை முதலமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்களின் பதவிகள் தொடர்பாக கேள்விக் குறியை எழுப்பியுள்ளது.



பொதுசன ஐக்கிய முன்னணியின் கட்டுப்பாட்டிலுள்ள ஊவா மாகாண முதலமைச்சர் சமரவீர வீரவன்னி அம்மாகாண முதலமைச்சராக நியமிக்கப்பட்டமை சட்டப்படி செல்லுபடியற்றது என உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இவ்வாறானதொரு நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

1987 இல் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக எனக்கூறிக் கொண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும், சிறிலங்கா சனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிற்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் மூலம் உருவாக்கப்பட்டதே இந்த மாகாண சபைகள்.

அந்த நீத மாகாண மக்களால் தேர்தல் மூலம் மாகாண சபைக்கான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

இந்த மாகாண சபைகள் சுயாதீன அதிகாரங்கள் எவையையும் கொண்டவையல்ல என்பதும், சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் கூட பாராளுமன்ற உறுப்பினர்களின் விட்டுக் கொடுப்பின்மையால் இன்னமும் மாகாண சபைகளுக்குக் கிடைக்கவில்லை என்பதும் பலமுறை நிரூபிக்கப்பட்ட விடயங்கள்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாணசபையை அம்மக்கள் பூரணமாக நிராகரித்து விட்டமையால் இங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நிர்வாகம் நடத்தவில்லை. சனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநர் ஒருவரே இதன் நிர்வாகத்தை நடத்துகிறார்.

ஆனால், ஏனைய மாகாணங்களில் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படுவதும்- இது குட்டிப் பொதுத் தேர்தல் போல அடிதடி வன்முறைகளுடன் அரங்கேறுவதும் வழமையாகும். மிக உச்சக்கட்டத் தேர்தல் வன்முறை வடமேல் மாகாணசபைத் தேர்தலின் போது நடந்தது காரணம் பொதுத் தேர்தல் ஒன்றுக்கான பரீட்சைக் களமாக இந்தத் தேர்தல்களைச் சிறிலங்காவிலுள்ள கட்சிகள் பயன்படுத்துவதனால் ஆகும்.சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூட மேல்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு தமது செல்வாக்கைச் சோதித்திருந்தார்.

தேர்தல்கள் எவ்வாறு நடந்து வெற்றிகள் எவருக்குக் கிட்டினாலும் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் உள்ள உறுப்பினர்கள் வரிசைக்கிரமப்படி அப்படியே மாகாண சபைக்கு நியமனமாகி விடுவதில்லை. கட்சிகள் தாம் விரும்பியவர்களுக்கே மாகாண சபை உறுப்பினர் பதவிகளை வழங்கியிருக்கின்றன. குறிப்பாக ஜே.வி.பியைப் பொறுத்தவரை இதனை வழமையானதொன்றாகச் செய்து வருகின்றது. இதற்குக் கட்சிச் செயலாளர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி வந்தார்.

ஆனால் இந்த அதிகாரம் குறித்த கேள்வி தற்போது எழுந்துள்ளது.அதாவது உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது கட்சிச் செயலாளரின் இவ் அதிகாரத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

1998 ஆம் ஆண்டு ஊவா மாகாண சபை முதலமைச்சராக சமரவீரவீர வன்னியை நியமிப்பதற்காக அம்மாகாண சபையின் பொ.ஐ.மு உறுப்பினர் ஒருவர் பதவி விலகினார். அதேவேளை ஊவா மாகாண சபை முதலமைச்சராக இருந்த சமரவீர வீரவன்னியின் மனைவி தனது பதவியை இராஜினாமா செய்து சாதாரண உறுப்பினராகினார்.

அவ்வேளை கட்சிச் செயலாளரின் சிபாரிசுக்கு அமைய சமரவீர வீரவன்னி மாகாண சபை உறுப்பினராக்கப்பட்டு பின்னர் முதலமைச்சராகினார். அவ்வளவிற்கும் சமரவீர வீரவன்னி ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டிருக்கவில்லை.



சமரவீர வீரவன்னி - பேட்டி பிரேம்லால் திசாநாயக்க - ரெஜ்னோல்ட் கூரே

இவ்வாறானதொரு நியமனத்தால் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் பதவி விலகி அல்லது மரணமடைந்து வெற்றிடம் உருவாகும் போது அத்தேர்தலில் போட்டியிட்டு மாகாண சபை உறுப்பினராகத் தெரிவாகாத ஆனால் அடுத்த நிலையிலுள்ள வேட்பாளரின் கதி குறித்துக் கேள்வி எழுகின்றது. மக்கள் தேர்தலில் வாக்களிக்கும் போது கட்சிக்கு மட்டுமல்ல விருப்புத்தேர்வின் அடிப்படையில் வேட்பாளர்களுக்கும் வாக்களிக்கின்றனர். இதனால் சமரவீரவீரவன்னியின் தெரிவு செல்லுபடியற்றதெனத் தீர்ப்பளிக்கும்படி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வாதிடப்பட்டது.

ஆனால் மாகாணசபை தேர்தல் சட்டத்தின்படி உறுப்பினர் பதவி ஒன்று வெற்றிடமாகினால் அதற்கு அவர் சார்ந்த கட்சியின் செயலாளரின் சிபாரிசின்படி உறுப்பினர் நியமிக்கப்படலாம் என்பதைச் சுட்டிக்காட்டி வீரவன்னியின் நியமனம் சரியானது எனத் தீர்ப்பளித்தது

இவ்வாறு உறுப்பினரை நியமித்தலில் மாகாணசபைச் சட்டம், முதல் சந்தர்ப்பத்தை கட்சியின் செயலாளருக்கும் இரண்டாவது சந்தர்ப்பத்தை வேட்பாளர்பட்டியலில் கூடுதலான விருப்பு வாக்குகளை அடுத்தபடியாகப் பெற்றுள்ளவரைப் பிரகடனப்படுத்த வழிசெய்கிறது.

இதுகுறித்து உயர்நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்த போது மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிர்மறையான தீர்ப்பை வழங்கியுள்ளது.

மாகாணசபைத்தேர்தலில் நியமனப்பத்திரத்தில் இடம்பெறாத ஒருவர் மாகாணசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்படத் தகுதி பெற்றிருக்கிறாரா? என்ற அடிப்படையில் வழக்கு நடைபெற்றது.

இதேவேளை 1998 நவம்பரில் பாராளுமன்ற ஒழுங்குபத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பிரேரணையில் நியமனப்பத்திரத்தில் இடம்பெறாத ஒருவரையும் அங்கத்த வராக நியமிக்கும் அதிகாரத்தைக் கட்சிச் செயலாளருக்கு வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து உயர் நீதி மன்றம் தனது தீர்ப்பில் அந்த மசோதாசட்டவிரோதமானது. அது சட்ட மாக்கப்படவேயில்லை எனத் தீர்ப்பளித்து சமர வீரவீரவன்னியின் நியமனம் செல்லுபடியற்றது எனத் தீர்ப்பளித்துள்ளது.

இத்தீர்ப்பின் பிரகாரம் சமரவீர வீரவன்னி முதலமைச்சர் பதவியிலிருந்து விலகவேண்டிவரும். ஆனால் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றிருந்த ஒருவர் மாகாணசபை அங்கத்தவராக நியமிக்கப்பட வேண்டும். அத்துடன்பொதுசன ஐக்கிய முன்னணி மாகாணசபை உறுப்பினர் ஒருவர் முதலாமைச்சராக நியமனம் பெறுவார்.

உயர் நீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பு சில மாகாணசபை முதலமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோரின் பதவி நிலைகள் குறித்த கேள்வியை எழுப்பியுள்ளன.

பொதுசன ஐக்கிய முன்னணி முதலமைச்சர்களான பேட்டிபிரேம்லால் திசநாயக்கா (வடமத்திய மாகாணம்) ரெஜினோல்டகூரே மேல் மாகாணம்) ஆகியோரது பதவிகளும் பறிபோகவுள்ளன.

இதேவேளை, ஜே.வி.பி. மாகாணசபை உறுப்பினர்களை வேட்பாளர் பட்டியலுக்கு வெளியேயிருந்தே நியமிப்பது வழக்கம் இவ்வாறானவர்களின் பதவிகளும் பறிபோகவுள்ளன.

மக்களால் தெரிவு செய்யப்படும் மன்றம் என்ற பெயரில் கட்சிக்கு மட்டுமல்ல உறுப்பினர்களுக்கும் மக்கள் வாக்களித்துள்ள நிலையில், ஆனால் உறுப்பினர்களைத்தெரிவு செய்யும் அதிகாரத்தை கட்சி எடுத்துக்கொண்டது தவறு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வேலவன்**

சிறிலங்காவின் அரசியல் அமைப்பு குளறுபடிகளும் அதனை செயற்படுத்தும் அரசியல்வாதிகள் செய்யும் தில்லுமுள்களும் பல. இவ்வகையில் இதுவும் ஒன்று அரசியல் அமைப்புக்கு வெளியே எதுவும் செய்யக்கூடாது என்று வலியுறுத்துவதும் எதுவும் செய்யமுடியாது என்றும் கூறுவதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு விடயத்தில் மட்டும் தான் போலும். ஏனைய விடயங்களில் அவர்கள் சட்டத்துக்குப் புறம்பாகவும் மக்கள் தீர்ப்புக்கு எதிராகவும் எதுவும் செய்யத் தயங்கமாட்டார்கள் என்பதையே இவ் விவகாரம் காட்டுகிறது.

●●●

# சொந்த இடங்களுக்கு திரும்பமுடியாது அவல வாழ்க்கை வாழ்கின்றோம்

## மருதனாமடம் நலன்புரிநிலைய மக்கள் தெரிவிப்பு

சமாதானச் சூழல் ஏற்பட்டு ஓராண்டு கடந்துவிட்ட நிலையிலும் நாம் எமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாது அகதி முகாமில் அவலப்பட்டுச் சீரழிந்து வருகின்றோம் என யாழ்ப்பாணம் மருதனாமடம் நலன்புரி நிலையத்தில் உள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

போதிய உணவு, இருப்பிட, மலசல கூட வசதிகள் இன்றி பல்வேறு கொடுமைகளை அனுபவித்து வருகின்றோம்.

தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த பலர் இங்கு வருகின்ற போதிலும் அவர்கள் அகதிகளான எம்மை விட்டு எப்படித் தாம் பணத்தைச் சம்பாதிக்கலாம் என்ற நோக்கத்துடன் தான் வருகின்றார்களே தவிர எமக்கு எதுவித முன்னேற்றததையும் வழங்க முன்வரவில்லை.

போதிய நீர்வசதியோ மற்றும் சுகாதார வசதிகளோ இன்றி பல சீரழிவுகளுக்கு மத்தியில் ஆட்டு மந்தைகள் போலவே நம்மை விட்டுள்ளனர்.

எமது சொந்த இடங்களுக்குச் சென்று குடியேறி அகதி என்ற சொல்லை இல்லாது ஒழித்து சுயமாக வாழ வேண்டும் என அவர் கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# மரக்கன்று வழங்க நடவடிக்கை

(திருமலை)

திருகோணமலை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நாளை 5ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை வனவள சுற்றாடல் வாரம் கடைப்பிடிக்கப்படுவதை முன்னிட்டு மாவட்டத்திலுள்ள மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்க முன்வந்துள்ளது.

ஒவ்வொரு பாடசாலை மாணவர்களுக்கும் நூறு மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளனள. வீடுகளில் நாட்டப்படும் மரங்களை நல்ல முறையில் வளர்த்தெடுக்கும் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாடசாலை ஒவ்வொன்றுக்கும் ஐந்து மரக்கன்றுகள் வீதம் வழங்கப்படவுள்ளன.

## வன்னிப் பிரதேச விவசாயிகள்

# காலபோக அறுவடை நெல்லை சந்தைப்படுத்த முடியாது திண்டாட்டம்!

(அலுவக செய்தியாளர்)

வன்னிப் பிரதேசத்தில் காலபோகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லினைச் சந்தைப் படுத்த முடியாது விவசாயிகள் பெரும் அவல நிலையினை எதிர் நோக்கி உள்ளனர். கடந்த காலபோகத்தின் போது பெருமளவு நெல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

வளமாக்கிகளுக்கான தடைகள் நீக்கப்பட்ட நிலையில் அவற்றின் பயன்பாட்டின் மூலம் உச்ச பயன்பாட்டினைப் பெற்றுக் கொண்ட விவசாயிகள் தற்போது சந்தைப்படுத்தல் செய்ய முடியாத அவல நிலையில் உள்ளனர்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களோ அல்லது தனியாரோ இந்த நெல்லினை முழுமையாகக் கொள்வனவு செய்ய முன்வரவில்லை. அத்துடன் சீரான விலை நிர்ணயங்கள் இன்றிக் காணப்படுவதால் நெற் கொள்வனவு இடம்பெறவில்லை. அவ்வாறு கொள்வனவு செய்யும் பொது அமைப்புக்களும் சிறு அளவிலேயே கொள்வனவுகளைச் செய்துள்ளன.

காலபோக நெல்லினைச் சந்தைப்படுத்த முடியாததால் பெரும் மூலதன முடக்கத்தினையும் இதனால் சிறுபோக நெற் செய்கையை மேற்கொள்வதில் பெரும் நிதி நெருக்கடியினையும் விவசாயிகள் எதிர்நோக்கி உள்ளனர்.

இதனால் இந்த நெல்லினைச் சந்தைப்படுத்துவதற்குரிய வசதி வாய்ப்புக்களைச் சம்பந்தப்பட்டவர்கள் செய்துதர வேண்டும் என விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (லோ)

# அரசியல் யாப்பிற்குள்ளும், பேச்சுவார்த்தைக்குள்ளும்

# ஒளிந்துகொள்ளப் பார்க்கும் பிரதமர் ரணில்!



டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டிற்கு இன்னமும் ஐந்து தினங்கள் மட்டுமே உள்ளன. ஆயினும் டோக்கியோ மாநாட்டில் இலங்கையில் இருந்து யார் யார் கலந்து கொள்வார்கள் என்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. குறிப்பாக காலம் குறுகக் குறுக விடுதலைப்புலிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்வது பற்றிய கேள்வி பெரிதாகிக் கொண்டே போகின்றது.

இக்குழப்பத்தின் காரணமாக ஜப்பான் பிரதமர் சிறிலங்காவிலுள்ள தனது தூதுவருக்கு யார் யார் பங்குபற்றுவார்கள் என அறியத் தருமாறு கோரியுள்ளார் இதேசமயம், விடுதலைப்புலிகள் பங்கு பற்றாது போனால் டோக்கியோ மாநாடு நடப்பதில் இடையூறுகள் தோன்றலாம் என்ற அபிப்பிராயமும் வெளியாகாமல் இல்லை. ஆயினும் மாநாட்டை முன்னின்று நடாத்தும் ஜப்பான் அரசு டோக்கியோ மாநாடு திட்டமிட்டவாறு நடைபெறும் என்று உறுதி படக் கூறிவருகின்றது.



ஜோன் பீற்றர்சன்

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்து இம்மாநாடு மிகவும் முக்கியம் வாய்ந்ததொன்றாகும். ஏனெனில், சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்க்கும் நிதி உதவியானது வருடாந்தம் 1பில். அமெரிக்க டொலர் - சுமார் 10,000 கோடி ரூபா - வீதம் மூன்று ஆண்டுகளுக்கு நிதியுதவியை எதிர்பார்க்கின்றது. உதவி வழங்கும் நாடுகளும், அமைப்புக்களும் இந்நிதியை வழங்குவதற்கு ஓரளவு தயாராக உள்ளன என்றும் கூறலாம்.

ஆனால் யுத்தத்தினால் பாதிப்புற்ற இலங்கையின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்கான இந்நிதியுதவியானது சமாதானம் ஓரளவு உறுதிப்பட்ட நிலையிலேயே வழங்கப்படுதல் வேண்டும் என சர்வதேச நாடுகள் எதிர்பார்ப்பது ஒன்றும் தவறில்லை. பொதுவான நடைமுறைகளின் படியே உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி அமைப்புக்கள் தமது உதவிகள் குறித்து பல நிபந்தனைகளை விதிப்பதென்பது ஒன்றும் புதியதல்ல.

இந்நிலையில், சிறிலங்கா அரசிற்குப் பெரும் தொகை நிதி உதவியை வழங்கத் தயாராகும் நாடுகளும்/அமைப்புக்களும் யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்பினரிடம் இருந்தும் பல உறுதி மொழிகளையும், உத்தரவாதங்களையும் பெற்றுக் கொள்ள விளைவதென்பது எதிர்பார்க்கத்தக்கதொன்றே. இந்நிலையில் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஒரு தரப்பான விடுதலைப்புலிகள் அமைப்பின் மீது குறிப்பிடத்தக்க நிபந்தனையையும், நிர்ப்பந்தங்களையும் பிரயோகிக்க அந்நாடுகள், நிதி நிர்வாகங்கள் முற்படலாம்.

அதிலும், குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகள் விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டதாக அறிவிக்க வேண்டும், ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் போன்ற நிபந்தனைகளைக் கூட நிர்ப்பந்திப்பதற்கான சூழ் நிலைகள் உண்டு. ஆனால், இவற்றில் எத்தகைய நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளுதல், எவற்றை ஏற்றுக் கொள்ளாது விடுதல் என்பது விடுதலைப் புலிகளைப் பொறுத்த விடயமாகும். உடனடி அவசர உதவி வழங்குவதற்கெனக் கூட்டப்பட்ட ஒஸ்லோ மாநாட்டில் கூட, அமெரிக்கா கோரிக்கைகள் சிலவற்றை முன் வைத்தமையும், புலிகள் அதனை நிராகரித்தமையும் சுட்டிக் காட்டத்தக்கது. ஆயினும், டோக்கியோ மாநாட்டிற்குச் சென்றால் விடுதலைப்புலிகள் ஒட்டுமொத்தமாக அனைத்து நிபந்தனைகளையும், வற்புறுத்தல்களையும் நிராகரித்து விடவும் முடியாது போகலாம்.

இந்நிலையில்தான் டோக்கியோ நிதியுதவி வழங்கும் மாநாட்டிற்குச் செல்லும் முன்னதாக இம்மாநாட்டின் மூலம் பெறப்படும் நிதியுதவியானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களைச் சென்றடைவதற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று இருத்தல் வேண்டும் என்ற கோரிக்கை விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து உறுதியான நிலைப்பாடு ஒன்றை வெளிப் படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் எடுத்தமைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நிறைவேற்ற அரசாங்கம் அரசியல் யாப்பைக் காரணம் காட்டிப் பின் வாங்கிக் கொண்டமையும் ஒரு காரணமாகும்.

அதாவது 'சிரான்' அமைப்பானது செயலிழந்து போனமையானது, தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றம் அளிப்பதாக இருந்தது. சிறிலங்கா ஆட்சியாளர்கள் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்ற முற்பட்டுள்ளனரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது. இது ஒரு வகையில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் மீது தமிழ் மக்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், பேச்சுவார்த்தையிலும், சமாதான முயற்சிகளிலும் நம்பிக்கை ஏற்படுத்தப்பட வேண்டுமானால் புனர்வாழ்வு-புனரமைப்புப் பணிகள் துரிதப்படுத்தப்படுதல் வேண்டும். தமிழ் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக் கூடிய அதிகாரக் கட்டமைப்பு ஒன்றின் மூலம் அது மேற்கொள்ளப்படுதல் என்பது அவசியமானதாகியது. இந்நிலையில் விடுதலைப்புலிகள் பெரும்பான்மையாகக் கொண்ட அதிகாரத்துடன், கூடிய ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியம் என்பது தவிர்க்க முடியாததாகியது.

இதனைத் தன்னைச் சந்தித்துப் பேச்சு நடத்திய நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன்னிடம் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தெளிவாகவே வலியுறுத்தியிருந்தார். "தமிழ் பேசும் மக்களின் தாயகத்தில் யுத்தத்தினால் பாதிப்புற்ற பொருளாதாரத்தை மீளக்கட்டி எழுப்பி, வழமை நிலையை மீள ஏற்படுத்தும் இலக்குத் தொடர்பான தீர்மானங்களை எடுத்துச் செல்லப்படுவதில் புலிகள் அதிக பங்களிப்புடனான போதிய அதிகாரங்கள் மற்றும் சட்டவலு அளிக்கப்பட்ட செயல் திறன் மிக்க இடைக்கால நிர்வாகம் அவசியம்" எனத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இவ்விடயத்தில் பொறுப்புடனோ துணிவுடனோ நடந்து கொண்டதாக இல்லை. ஒரு புறத்தில் புலிகளின் கோரிக்கையை அசமந்தப் போக்கில் அணுகியது. மறுபுறத்தில் அவ்விடயத்தில் முன்னேற்றகரமான உறுதியான தீர்மானத்திற்கு வரவும் அதனால் இயலவில்லை.

விடுதலைப்புலிகள் இயக்கமானது கடந்த ஏப்ரல் மாதத்தின் மூன்றாம் வாரத்தின் இறுதியிலேயே அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டின் சரத்துக்களை அமுல் செய்வதில் காட்டும் அசமந்தம், பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட இணக்கப்பாடுகளை நிறைவு செய்வதில் மேற்கொள்ளும் பின்னடிப்பு என்பவற்றின் காரணமாக மே மாதத் தொடக்கத்தில் தாய்லாந்தில் நடைபெறப் போகும் ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் இருந்தும், யூனில் யப்பானில் நடைபெறப் போகும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிலும் இருந்தும் விலகிக் கொள்ளப் போவதாக அறிவித்திருந்தனர்.

ஆனால், அரசாங்கமோ புலிகளின் இவ் எச்சரிக்கைகளைப் பொருட்படுத்தவில்லை. இவ்வாறு அரசாங்கம் பொருட்படுத்தாமல் இருந்தமைக்கு-யுத்தம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் அமெரிக்கா தமக்குப் பேருதவியாக இருக்கும் என நம்பியதினாலும் - அமெரிக்காவின் உதவி தமக்குக் கிட்டும் என்பதைப் புலிகள் புரிந்து கொண்டுள்ளனர் என்று நம்பினதினாலும் கூட இருக்கலாம்.

அவ்வாறு இல்லாது விடில் ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் இருந்து புலிகள் விலகுவதாக முன்னறிவிப்புச் செய்தபோது அச் சுற்றுப் பேச்சுவார்த்தையை தொடர்வதற்கு அரசாங்கம் பெரும் அக்கறையுடன் செயற்பட்டிருக்கும். அத்தோடு ஜப்பானில் நடைபெறும் மாநாட்டில் அரசாங்கம் முழுக் கவனத்தையும் செலுத்தியது போன்று மாநாட்டில் புலிகளின் பங்களிப்புக் குறித்து அது அக்கறை கொண்டதாக இருந்திருக்கும்.

அவ்வாறு அரசாங்கம் நடந்து கொண்டமைக்கு ஜப்பான், நோர்வே போன்றவை மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகளும், உதவி வழங்கும் வல்லரசுகளின் அழுத்தங்களும் புலிகளை ஜப்பான் மாநாட்டிற்கு வரவழைத்து விடும் என நம்பியிருத்தல் கூடும். இதனை வெளிப்படுத்துவதுபோன்றே ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷி, நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் ஆகியோர் வன்னி வந்து திரும்பும் வரையிலும், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் புலிகள் டோக்கியோ மாநாட்டில் பங்கேற்க வேண்டும் அல்லது விளைவுகள் மோசமாகலாம் என எச்சரிக்கும் வரையிலும் எதுவித முயற்சியும் அரசாங்க தரப்பால் எடுக்கப்படாமல் இருந்தது.

ஆனால், விடுதலைப்புலிகள் டோக்கியோ மாநாட்டிற்கு முன்பாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக அரசாங்கத்தின் உறுதியான பதிலை எதிர்பார்த்திருந்தனர். இந்நிலையில் தான் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளில் இருந்து இடைவிலகி இருப்பதாக அறிவித்து ஒரு மாதமும் ஒரு வாரமும் கடந்துவிட்ட நிலையிலேயே அரசாங்கம் புலிகளின் கோரிக்கைக்குப் பதிலளிக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தது.

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஊடாகப் புலிகளுக்குஅனுப்பி வைத்துள்ள கடிதத்தில் விடுதலைப்புலிகள் கோரியிருந்த அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்துப் பதிலேதும் அளிக்கப்படாத நிலையில். புதியதொரு பிரேரணையை அரசாங்கம் முன்வைத்திருந்தது. மூன்று மட்ட கட்டமைப்புக்களைக் கொண்ட இப் பிரேரணையானது. சிறிலங்கா அரசியல் யாப்பிற்கு உட்பட்ட விதத்தில் - விடுதலைப்புலிகளின் பங்கு, பணிகள் பற்றி தெளிவானதொரு வரையறையும் கொண்டதாக இல்லாததோடு, நிர்வாகத்தில் புலிகளின் பங்களிப்பிற்கு இடமில்லை என்பது போன்ற தொனியுடன் கூடியதாக இருந்தது.

அதாவது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு குறித்து மாறாகப் பேசவோ அன்றி மறுக்கவோ விரும்பாத பிரதமரின் கடிதம் வடக்கு-கிழக்கு நிர்வாகமானது மத்திய அரசாங்கத்தினதும் மாகாண அரசிற்கு உட்பட்டதென்பதைத் தெளிவுபடுத்த முற்பட்டு நிற்கின்றது. அதாவது சிறிலங்காவின் ஒற்றையாட்சி அமைப்பிற்கு மாறுபாடான விதத்தில், அரசியல் யாப்பிற்கு அப்பாற்பட்ட விதத்தில் எதையும் மேற்கொள்ளுதல் என்பது சாத்தியமற்றது என்பதை அக்கடிதம் விபரிப்பதாக இருந்தது.

இதனை வலியுறுத்துமாப் போன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆசிய தாராளவாதிகள், சனநாயகவாதிகள் கவுன்சிலின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய பேச்சும் இருந்தது. "இடைக்கால நிர்வாகம் என்பது அரசியல் யாப்பிற்குப் புறம்பானது. நாட்டின் அரசாங்கம் என்ற வகையில் அரசின் சட்ட யாப்பிற்கு உட்பட்டே என்னால் செயற்பட முடியும்" என அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால், குறிப்பிடத்தக்களவில் நிர்வாகத்தில் பங்கேற்பின்றி அரசாங்கம் முன் வைத்த புனர்வாழ்வு அபிவிருத்தி கட்டமைப்புக் குறித்த பிரேரணைகளை விடுதலைப்புலிகள் இயக்கம் திட்டவட்டமாக நிராகரித்துள்ளது. அதாவது ஒற்றையாட்சி முறைக்குள் உட்பட்ட, " பல திறமையற்ற முடங்கிப் போன அரச நிறுவனங்கள் அமைப்புக்கள் ஆகியவற்றுடன் இணைந்த ஒரு புதிய அதிகார வர்க்க சபையாக அமையும்." இப் புதிய திட்டமானது புலிகளால் நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்நிராகரிப்பு வெளிவந்து இரண்டு தினங்களில் மீண்டும் ஒரு கடிதத்தினை நோர்வே அரசின் ஊடாக புலிகளுக்கு அனுப்பிவைத்திருந்தார். இக்கடிதம், அரசாங்கம் முன்வைத்த அபிவிருத்தி புனர்வாழ்விற்கான புதிய கட்டமைப்புக்குறித்த சில மேலதிக விளக்கத்தைக் கொண்டதாக இருந்துள்ளதே ஒழிய புதிய ஆலோசனைகள் எதனையும் கொண்டதாகவில்லை. அதாவது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து எதையும் பிரஸ்தாபிக்கவில்லை. மாறாகப் புதிய கட்டமைப்புக் குறித்து விளக்கங்கள் அளிக்கும் பொருட்டு விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுப்பதாகவுமே உள்ளது.

ரணில் அரசாங்கத்தின் இந்நிலையானது ஒரு புறத்தில் அரசியல் யாப்புச்சட்டத்திற்குள்ளும், மறுபுறத்தில் பேச்சுவார்த்தைக்குள்ளும் ஒழிந்து கொள்வதானது போன்றிருந்தது. அதாவது, பேச்சுவார்த்தைகள் தொடரப்படுதல் வேண்டும். இதன் மூலம் சமாதானச் சூழ்நிலை நிலவுவதாகவும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஒரு



சூழ்நிலையையும் அபிப்பிராயத்தையும் உருவாக்குதல் வேண்டும்.

இதேவேளை, அரசியல்யாப்பைக் காட்டி அதிகாரப்பரவலாக்கல் குறித்தோ அன்றி இடைக்கால நிர்வாகம் குறித்தோ பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் அரசியல் யாப்பை என்னால் மீறிச் செயற்பட முடியாது. புலிகள் எனது நிலமையைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளின் மூலம் அரசியல் சூழ்நிலைகளைச் சாதகமாக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்பதே பிரதமர் ரணிலின் அணுகுமுறையாக இருந்துள்ளது.

ஆனால், விடுதலைப்புலிகளைப் பொறுத்து இவையல்ல பிரச்சினை. விடுதலைப்புலிகளை பொறுத்து தமிழ் மக்களின் நலனே அதி முக்கியமானது. சமாதான முயற்சிகள் ஊடாக எமது மக்களின் சொல்லொணாக் கஷ்டங்களையும் துயரங்களையும் களைகின்ற நடவடிக்கைகள் முன்னேற்றம் காணப்படுதல் வேண்டும். இதற்கு திறனற்ற செயல்திறன் இழந்த அரசாங்கதின் நிர்வாகத்தின் அதிகாரமே தடைக்கல்லாக இருப்பதினால், புலிகளின் அதிக பங்களிப்புடன் கூடிய செயல்திறன் மிக்க கட்டமைப்புத் தேவை என்பதே ஆகும்.

ஆனால், இத்தகையதொரு உறுதிமொழியை ரணில் அரசாங்கம் இதுவரையில் வழங்கத்தயாராக இல்லை. ரணில் அரசாங்கம் தனது அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக அரசியல் யாப்பிற்குள், சர்வதேச நாடுகளிடமிருந்து பெருந்தொகை நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக சமாதானப் பேச்சுவார்த்தைக்குள்ளும் தன்னை மறைத்துக் கொள்ள முற்படலாம். ஆனால் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் இடர்களைத் தீர்ப்பதற்கான உறுதி மொழிகளைப் பெறாமல் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வதினால் பெரும் பயன் எதுவும் கிட்டுவதற்கில்லை.

மாறாக தற்போதைய நிலையில் புலிகள் கலந்து கொள்வதினால், சிறிலங்கா அரசு பெற்றுக் கொள்ளும் பெருந்தொகைப் பணத்திற்காக - நிபந்தனைகளையும் உத்தரவாதங்களையும் புலிகள் வழங்க வேண்டியதாகவே இருக்கும். இது எதிர்காலத்தில் சிறிலங்கா அரசு பலப்படுவதற்கும் - விடுதலைப்புலிகள் பலவீனப்படுவதற்குமான தொன்றாகக்கூட அமைந்து விடக்கூடும்.

ஜெயராஜ்

# திறப்புவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

எமது மக்களின் நலன் கருதி முல்லைத்தீவு நகரில்
04.06.2003 இன்று காலை 09.16 மணி தொடக்கம்
10.46 மணி வரையுள்ள சுபநேரத்தில்



## கலையரசி நகைமாடம்

எனும் புதிய தொழில் ஸ்தாபனம்
ஆரம்பிக்கவுள்ளோம். இந்நிகழ்வினில்
அனைத்து அன்பு உள்ளங்களையும்
அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவரையும்
கலந்து சிறப்பிக்குமாறு மிகவும்
அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-7750)

பிரதான வீதி,
முல்லைத்தீவு.

அழைப்பு:
சு. பழனிநாதன் அறிவழகன்
(அறிவு)



# FUJIFILM

04.06.2003 இல் இருந்து

வன்னி மண்ணில்
ஒரு புதிய உதயம்

## வன்னி மக்களின்தேவைக்காக கணனி முறையில்

- 30நிமிடத்தில் புகைப்படச் சுருள் பிரதியாக்கல் (படங் கழுவுதல்)
- வீடியோ, புகைப்படம் பிடித்தல்
- பாடல் பதிவுகள்
- வீடியோ, ஓடியோ, புகைப்படப் பொருட்கள்விற்பனை அனைத்திற்கும்
- உயர் கணனி முறை வீடியோ மிக்சிங்
- டிஜிட்டல் முறையில் அல்பங்கள் தயாரித்தல்

# பொற்காலம் வர்ணக் கலையகம்

அனைவரும்
வருக! வருக!

## Millennium Colour Lab
### Studio / Video & Audio

யாழ் சாலை, கிளிநொச்சி Jaffna Road, Killinochchi

(சி-7890)

**சிந்தனைக்கு**

சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 04-06-2003

## பேசுவதற்கு முன்பாக....!

விடுதலைப்புலிகளுடன் தமது புதிய பிரேரணைகள் குறித்துப் பேச்சு நடத்துவதற்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள விருப்பமானது, அவர் தம் மீதானதொரு நல்லபிப்பிராயத்தை அரசியல் வட்டாரத்தில் ஏற்படுத்துவதற்கு சில வேளைகளில் வாய்ப்பாக இருக்கலாம். ஆனால், விடுதலைப்புலிகளின் கோரிக்கையை நிறைவு செய்ய அது எந்த வகையில் உதவக்கூடும் என்பது கேள்விக்குரியதொன்றே.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய நடவடிக்கைகள் சில, தம்மீதான அனுதாபத்தைத் தோற்றுவிக்க அவர் முற்படுகின்றாரோ என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்துவதாக உள்ளது. "புலிகள் மேலும் நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்". "விடுதலைப் புலிகளுக்கு விளக்கமளிக்க பேச்சுவார்த்தைகளுக்கான சந்தர்ப்பம் ஒன்றை நோர்வே அரசு உருவாக்கித் தர வேண்டும்" என்பவை எல்லாம் அந்தவகையிலான அறிவிப்புக்கள் போன்றே உள்ளன. மறுவளமாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இயலாமையை வெளிப்படுத்துபவை போன்றும் உள்ளன.

ஆனால், அடிப்படையில் பிரதமர் விக்கிரமசிங்கவின் இக் கோரிக்கைகள் நியாயமற்றவையும் பொருத்தப்பாடு அற்றவையாகவும் உள்ளன. தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். சமாதான முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பவை அவசியமானதே ஆகும். ஆனால், நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காணப்பட வேண்டும். பேச்சுவார்த்தை தீர்வுநோக்கி முன்னேறுவதாக மக்கள் மத்தியில் நம்பிக்கை உருவாக வேண்டும் என்பது அதைவிட முக்கியமானதாகும்.

தற்பொழுது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கோரியிருப்பதானதோ விடுதலைப்புலிகள் முற்றாகவே நிராகரித்துள்ள அரசாங்கத்தின் புதிய புனர்வாழ்வு அபிவிருத்திக் கட்டமைப்புக் குறித்து விளக்கம் ஒன்றை அளிப்பதற்காகவே ஆகும். இது ஒரு விதமாகப் பிரதமர் தன்னை நியாயப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கை போன்றதே .

ஏனெனில், அரசாங்கத்தின் பிரேரணைகளை நிராகரித்த விடுதலைப்புலிகள் அப்பிரேரணைகளைத் தீவிரமாக ஆராயாமல் இருந்திருக்க மாட்டார்கள். அத்தோடு, புலிகள் பிரேரணைகளை வாசித்து நன்கு விளங்கிக் கொண்டுள்ளார்கள் என்பதற்கு அவர்கள் அப் பிரேரணைகளை நிராகரித்து பிரதமர் ரணிலுக்கு அனுப்பி வைத்த கடிதம் சான்றாகும். அக்கடிதத்தில் தாம் நிராகரித்ததற்குரிய காரணிகளைப் புலிகள் தெளிவாகவே சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்தோடு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பி வைத்துள்ள பிரேரணைகள் தொடர்பாகப் பேச்சுக்களை நடத்துவதில் பயன் ஏதும் ஏற்படுமா என்பதும் கேள்விக்குரியதொன்றாகவே உள்ளது. ஏனெனில், தமிழ் மக்கள் நிராகரித்துள்ள அரசியல் யாப்பிற்குட்பட்ட அதிகார அலகு ஒன்றைப் பற்றிப் பேசுவதிலோ அன்றி விளக்கமளிப்பதிலோ பயன் ஏதும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

இதேவேளை, விடுதலைப்புலிகள் பிரதமரின் புனர்வாழ்வு அபிவிருத்திக் கட்டமைப்பை நிராகரித்து அனுப்பிய கடிதத்தில், ஒற்றையாட்சி அமைப்புக்குள் ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படுவதை புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனத் தெளிவுபடக் கூறியுள்ளனர். இந்நிலையில் அதற்குப் பதில் போன்று அனுப்பிய கடிதத்தில் தமது நிலைப்பாடு குறித்து விளக்கமளிக்க ரணில் விக்கிரமசிங்கா முற்பட்டுள்ளாரேயொழிய புலிகளின் நிலைப்பாடு பற்றிப் பேச்சுக்கள் எதையும் எடுத்ததாக இல்லை.

இவை ஒருபுறம் இருக்க- பேச்சுவார்த்தைகளினால் நன்மைகள்/முன்னேற்றங்கள் என்பன ஏற்படும் என்ற நம்பிக்கையும் வளர்த்தெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால், சிறிலங்கா அரசாங்கம் அதற்கு ஒத்திசைவான நிலையைக் கொண்டதாக இருக்கவில்லை. எடுத்துக்காட்டாக அரசாங்கத்திற்கும்-புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளினால் மக்களுக்குக் கிட்டிய நன்மை என்ன என்ற கேள்வியே உள்ளது. இதற்கு, பேச்சுவார்த்தையில் காணப்பட்ட இணக்கப்பாடுகள் தீர்மானங்களை அரசு அமுல் செய்யாது போனது காரணமாகும்.

ஆனால், இவற்றைக் கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத்தப்படக் கூடாது என்றோ, பேச்சுவார்த்தைகளினால் நன்மைகள் எட்டப்பட முடியாது என்றோ இங்கு கூறவில்லை. பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுமானால் அவை தீர்வொன்றை நோக்கி முன்னேறக் கூடியவையாகவும், அமுல்படுத்தக் படிபவையாகவும் இருக்க வேண்டும். தற்போதைய நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கானதாக மட்டும் இருத்தல் கூடாது.

ஆகையினால், தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் நீக்கப்பட்டு, பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனில் அரசாங்கம் முன்னேற்றகரமான முடிவுகளையும், தமிழ் மக்களின் மனங்களை வெற்றி கொள்ளக் கூடிய தீர்மானங்களையும் எடுக்க வேண்டும். மக்களால் நிராகரிக்கப்பட்டவற்றைப் பற்றிப் பேசுவதினாலோ, அன்றி நேர் எதிர் முரண்பாடுகளை வெளிப்படுத்தும் விடயங்கள் குறித்து விவாதிப்பதினாலோ பயனில்லை. விடுதலைப்புலிகள் இயக்கம் அன்று போல் இன்றும் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவே இருப்பதாகத் தெரிகின்றது. ஆனால், அரசாங்கம் போடும் எல்லைக்குள் நின்று பேச அது விருப்பம் கொண்டிருக்கவில்லை என்றே எண்ண வைக்கிறது.

# பேச்சுக்கள் காலத்தை இழுத்தடிக்கும் செயலாகவே புலிகள் கருதுகின்றனர்

## - பொ.ஐ.மு. பேச்சாளர் சரத் அமுனுகம

டோக்கியோ மாநாடு திட்டமிட்டபடி நடக்கும் எனவும் எக்காரணங் கொண்டும் ஒத்திவைக்க அல்லது ரத்து செய்ய பொ.ஐ.மு. அரசாங்கம் இடமளிக்காது என கட்சியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது மேலும் அவர் கூறியதாவது

நோர்வே பிரதம மந்திரி வெளிநாடொன்றில் சனாதிபதியைப் பற்றி தவறான கருத்துக்கூறியிருக்கிறார். அதனை நாம் கண்டிக்கின்றோம். ஒரு நாட்டின் பிரதமர் இன்னொரு நாட்டின் தலைவரை விமர்சிப்பதை சுதந்திர இலங்கை என்ற வகையில் ஏற்றுக் கொள்ள முடியாது. அவர் எமக்கு அறிவுரைகூற உரிமையில்லை. சனாதிபதியோ, அரசியலமைப்போ என்ன கூறினாலும் அரசு புலிகளை நல்ல நோக்கத்தோடு பார்க்க வேண்டும் என நோர்வே பிரதமர் கூறுவதை நாம் நிராகரிக்கிறோம்" என்று கூறியுள்ளார்.

இடைக்கால நிர்வாகம் பற்றி அன்று ஜே.ஆர். இணங்கியது வடக்கு - கிழக்கு நிர்வாகம், பொலிஸ் நிர்வாகம் அவ்வாறே இருக்க வேண்டும் எனவும் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் எனவும் இடைக்கால நிர்வாகம் புலிகளுக்கு மட்டுமன்றி அனைத்து இனங்களுக்கும் இடமளிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடனேயே. இந்த நிலைப்பாட்டையே ஜனாதிபதி சந்திரிகாவும் கொண்டுருந்தார்.

இந்த அரசுடனும் நடைபெறும் பேச்சுக்களை தீர்வு காணப்படாத காலத்தை இழுத்தடிக்கும் செயலாகவே புலிகள் கருதுகின்றனர். புலிகளுக்கு அனுப்பிய கடைசிக் கடிதம் பற்றி சனாதிபதிக்கு எதுவும் தெரியாது. இடைக்கால நிர்வாகம் மக்கள் கருத்துக்களுக்கும் அரசியலமைப்பிற்கும் ஒவ்வாத வகையில் வழங்கப் படமாட்டாது என பிரதமர் இப்போதாவது தெரிவித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

இவ்வாறு அமுனுகம கூறியுள்ளார்.

# இடைக்கால நிர்வாகம் வேண்டுமாயின் புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும்

## - அரசின் நிலை இதுவென்கிறார் அமைச்சர் தயாரத்ன

(கொழும்பு)

"சிறிது காலம் மௌனமாக இருந்த புலிகள் இப்போது இடைக்கால நிர்வாகம் கோருகிறார்கள். இடைக்கால நிர்வாகம் அளிக்கவேண்டுமாயின் அவர்கள் ஆயுதங்களைக் கிழே வைக்கவேண்டும் என்பது அரசின் கருத்தாகும். இடைக்கால நிர்வாக முறையும் அளிக்கப்பட்டு ஆயுதங்களை அனுமதித்தால் அது தனியரசு வழங்கியதற்குச் சமனாகும்" இவ்வாறு சிறிலங்காவின் சுகாதார சத்துணவு நலன்புரி அமைச்சர் பி.தயாரத்ன அம்பாறை மாவட்ட ஐ.தே.க. அமைப்பாளர்கள் முன்னிலையில் உரையாற்றும்போது கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுயதாவது;

கடந்த காலங்களில் கொழும்பில் நடைபெற்ற பேச்சுக்களில் அவர்கள் பங்கு பற்றியிருக்கிறார்கள் அமெரிக்கா, கனடா, ஜப்பான் போன்ற நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அந்த மாநாட்டில் கலந்து கொண்ட புலிகள் அனைத்து உதவிகளும் வடக்கு கிழக்கிற்கே பயன்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். ஆனால் அந்நாடுகள் சிறிலங்காவின் அனைத்து பாகங்களுக்கும் அவ்வுதவிகள் பயன்பட வேண்டும் எனக்கூறியிருந்தார்கள் என்று தெரிவித்துள்ளார்.

# ஜப்பானிய ஜெபிக் குழுவினரால் அக்கராயன்குளம் பார்வை

அக்கராயன் குளத்தை நேற்று முன்தினம் காலை ஜப்பான் நாட்டைச்சார்ந்த ஜெபிக் குழுவினரின் விசேட ஆலோசகர் கொன்சிமிரு பார்வையிட்டார். அவர்களுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் பா.செளந்தர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறியியலாளர், நீர்ப்பாசன பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், திட்டக் குழுக்கள், விவசாய பிரதிநிதிகள், விவசாய மக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

20 வருட காலமாக செயற்படாதருந்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டம், குளக்கட்டுக்கள், பாழடைந்த நிலையில் உள்ள வாய்க்கால்கள் ஆகியவற்றை இப்பிரதிநிதிகள் நேரில் சென்று பார்வையிட்டனர். இதன் பின்பு அப்பிரதிநிதிகள் குழுக்கள் விவசாய பிரதிநிதிகள், விவசாய மக்கள் ஆகியோரிடம் இருந்து குளம். வாய்க்கால, ஏற்று நீர்பாசனத்திட்டம் ஆகியவற்றின் தரவுகளைக் கேட்டறிந்தனர். இதன் பின்பு அப்பகுதியில் உள்ள குடியிருப்புக்களை நேரில் சென்று இவர்கள் பார்வையிட்டனர். (12)

# குற்றச் செயல்கள் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த பொலிசாருடன் அதிரடிப்படையும் இணைவு!

## -உள்துறை அமைச்சர் நடவடிக்கை

(கொழும்பு)

சிறிலங்காவில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த சிறிலங்கா பொலிசாருடன் விசேட அதிரடிப்படையினரையும் இணைந்து செயற்படவைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாதாளஉலகக்குழுவினரின் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிறிலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இது குறித்து தமது அமைச்சு அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளிடமும் கலந்துரையாடியுள்ளார்.

அண்மையில் கொழும்பில் அதியுயர் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் தெண்மாகாண அமைச்சர் ஒருவர் கொல்லப்பட்டமை தெரிந்ததே இதற்கு பாதாள உலகக் குழுவினரே காரணமெனவும் இவர் பாதாள உலகக் குழுவொன்றின் தலைவராக செயற்பட்டு வந்ததும் தெரிந்ததே. இந்தச்சம்பவம் பாதாள உலகக்குழுக்களைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரசிற்கு ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

# பாகிஸ்தானுடன் கிரிக்கெட் போட்டிகளுக்கு இந்தியாவிடம் உறுதியான பதில் இல்லை!

இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளை நடத்துவது குறித்து இந்தியா இதுவரை உறுதியான பதில் எதனையும் தெரிவிக்கவில்லை.

வெகுவிரைவில் இரு தரப்புக்கும் இடையிலான போட்டிகள் இடம்பெறும் எனினும் உறுதியான திகதியைக் குறிப்பிட முடியாது என்று என்று கல்கத்தாவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் முரண்பாடுகள் காரணமாக மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா, பாகிஸ்தானுடனான கிரிக்கெட் போட்டிகளை நிறுதிக்கொண்டது.

எனினும் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இந்தியாவுடன் விளையாட விருப்பம் தெரிவித்திருக்கின்றது.

தற்போது அரசியல் ரீதியில் ஏற்பட்டு வருகின்ற சுமூக நிலைமையை அடுத்து இரு தரப்புக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டிகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## அமெரிக்காவிலும் நடைபெறும்

ஐரோப்பாவில் அநேக நாடுகளுக்கும், அமெரிக்கா முழுவதும் கிரிக்கெட் என்றால் என்ன என்று தெரியாமல் இருக்கும் நிலையில் 2007ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் சில வற்றை அமெரிக்காவில் நடத்துவதுபற்றி ஆய்வுகள் நடைபெறவுள்ளன.

இது தொடர்பாக வரும் 20ஆம் திகதி லண்டனில் நடக்கவிருக்கும் ஐ.ஸி.ஸி. நிர்வாகிகள் கூட்டத்தின்போது அமெரிக்க மக்களின் ஆர்வத்தை அதிகரிக்கும் வழிகள் பயிற்சியாளர் நியமனம், மைதானம் என்பனவும் ஆராயப்படவுள்ளன.

# தனியான நிர்வாகக் கட்டமைப்பு கிடைக்கும் வரை புனர்நிர்மாணம் காகிதங்களில் மட்டுமே

## வடக்கு-கிழக்கு கிராம அலுவலர் சம்மேளனம்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு மிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு கடந்த நிலையிலும் வடக்கு கிழக்குப்பகுதிகளில் எந்த மாற்றங்களுமே ஏற்படவில்லை என வட-கிழக்கு கிராம அலுவலர் சம்மேளனம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அரசியல் சமூக பொருண்மிய ரீதியாக பேரினவாத ஒடுக்குமுறையினால் பாதிப்புற்ற எமது பிரதேசத்தின் புனர்நிர்மாணத்திற்கென தரப்படும் நிதி முழுவதும் பொது மக்களுக்கே செலவிடப்படவேண்டும் என்பதில் இரண்டு வேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. இதனை செயற்படுத்துவதற்கு தனியான நிர்வாக அமைப்புத் தேவை என்பதனை எல்லோரும் ஏற்றுக் கொள்வர். இத்தகைய அமைப்பு எமக்குக் கிடைக்கும் வரை புனர்நிர்மாணம் என்பது காகிதங்களில் மட்டுமே இருக்கும்.

இதுவரை காலமும் பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் தொடர்ந்தும் குதறப்பட்டு வந்த தமிழ் மக்களும் அவர்களது தாயகமும் செழுமை காணவேண்டும். அதற்கு எமக்கு தனித்துவமான நிர்வாகக் கட்டமைப்பு தேவை. இதன் மூலமே தமிழ் மக்களின் தேவைகளை நிறைவுசெய்யமுடியும். இல்லையெனில் தெற்குவரை வடக்கு கிழக்கு தேயும் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ஐ.நா. அகதிகளுக்கான -

# உதவி உயர் ஸ்தானிகர் கொழும்பு வருகின்றார்

(கொழும்பு)

நான்குநாள் விஜயமொன்றை மேற்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உதவி உயர் ஸ்தானிகர் காமல் மொகதீன் இன்று கொழும்பிற்கு வருகிறார் என ஐ.நா.வின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய செய்திகள் தெரிவிக்கின்றன.

டோக்கியோ மாநாட்டிற்கு முன்னதாக இலங்கையில் காணப்படும் சர்ச்சைக்குரிய விவகாரங்கள் குறித்து அறிந்து கொள்வதற்காக கொழும்பிற்கு வரும் உதவி உயர் ஸ்தானிகர் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி தொடர்பாக ஐ.நா. சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் எவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்பது குறித்து கவனம் செலுத் துவார் என்றும் ஐ.நா.சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானி கராலய செய்தி தெரிவித்துள்ளது.

# பொ.ஐ.மு. வினரின் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்

## - எதிர்க்கட்சித் தலைவர் தலைமை தாங்கினார்

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்கள் கொல்லப்பட்டு வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தியுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் மாகாண சபை அமைச்சர் ரஞ்சித் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு இந்த ஆர்ப்பாட்டத்தின் போது கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# லக்ஷ்மன் கதிர்காமருக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)



சிறிலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமருக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவருக்கு விசேட பாதுகாப்பை வழங்க சிறிலங்கா அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது.

# கோணாவில் பகுதியில் இலவச மருத்துவ சேவை

(அலுவலக செய்தியாளர்)

கோணாவில் பகுதியில் வசித்துவரும் மக்களின் நலன்கருதி ஏ.எம்.டி.ஏ. நிறுவனத்தினால் ஒவ்வொரு திங்கட்கிழமையும் கோணாவில் கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் இலவச மருத்துவ சேவை நடத்தப்பட்டு வருகிறது.

இச்சேவையால் இப்பகுதியில் வசித்துவரும் ஏராளமான மக்கள் நன்மை அடைந்து வருகின்றனர். (லோ)

# மண்சரிவு அபாயம் நீங்கவில்லை மக்களை அப்புறப்படுத்த நடவடிக்கை

வெள்ள அனர்த்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் உடனடி மண்சரிவு அபாயமுள்ள இடங்களிலிருந்து மக்களை அகற்றும் நடவடிக்கைகள் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இரத்தினபுரி, மாத்தறை, களுத்துறை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால், பெரும் உயிரிழப்பும் உடமை அழிவுகளும் ஏற்பட்டமை தெரிந்ததே.

இதன்போது மண்சரிவு ஏற்பட்டிருந்தமை தெரிந்ததே. மேலும் மண்சரிவு ஏற்படக்கூடும் என நிபுணர்கள் எச்சரிக்கை செய்தமையை அடுத்து மண்சரிவு அபாயம் நிலவும் பகுதிகளிலிருந்து மக்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# வடக்கு - கிழக்கு மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர்களுக்கு இரண்டுநாள் செயலமர்வு

(திருமலை)

வடக்கு - கிழக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கான இரண்டுநாள் செயலமர்வு நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணபாடசாலைகளில் தமிழ்மொழி கல்வி அபிவிருத்தியை மேம்படுத்தும் வகையில் மாகாணத்தில் உள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இச்செயலமர்வு இடம்பெற்றது.

இச்செயலமர்வை மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் தியாகலிங்கம் ஆரம்பித்துவைத்தார். (25)

# சிறில. கடற்படைப்படகுகளில் கண்காணிப்புக்குழுவின் கொடி

## -பாதுகாப்பு அமைச்சு உத்தரவு

கடற்படையினரின் படகுகளில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கொடியைப்பறக்கவிட வேண்டும் என்று சிறிலங்காவின் படைத்துறை அமைச்சினால் கட்டளையிடப்பட்டுள்ளது.

அனைத்து பிராந்திய கடற்படைத் தளபதிகளுக்கும் இந்த உத்தரவுக் கடிதம் படைத்துறை அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பர்ணான்டோவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

படைத்துறை அமைச்சில் இடம்பெற்ற உயர் மட்டக்கூட்டம் ஒன்றில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றுக்கு அமையவே இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### டோக்கியோ....

விருத்திக்கென புதியதொரு கட்டமைப்பிற்கான பிரேரணை ஒன்றையும் புலிகளிடம் சமர்ப்பித்திருந்தனர்.

ஆனால், விடுதலைப்புலிகள் இப்புதிய கட்டமைப்பை நிராகரித்ததோடு அதற்கான காரணத்தையும் தெரிவித்திருந்தனர். ஆயினும் அரசாங்கம் புதிய திட்டங்கள் எதையும் முன்வைக்காததோடு தனது வழமையான நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்ட வண்ணமிருந்தது.

இந்நிலையில் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில்கலந்துகொள்வதில் அர்த்தம் இல்லை என்ற நிலையில் விடுதலைப்புலிகள் அமைப்பு இம்மாநாட்டில் கலந்து கொள்வதில்லை எனத் தீர்மானம் செய்துள்ளதாகப் புலிகள் வட்டாரத்தில் இருந்து தெரியவருகின்றது.

## விண்ணப்பங்கள் கோரல்

ஈழநாதம் நிறுவனத்தில் பயிற்சிப் பத்திரிகையாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ளோர் வரும் 08.06.2003 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஜெயந்திநகரிலுள்ள ஈழநாதம் பணிமனைக்கு உரிய ஆவணங்களுடன் வருகை தரவும். கல்வித்தகைமை க.பொ.த.உயர்தரம்.

ஈழநாதம்.

சுத்தம் பேணி சூழல் காத்திருவீர்
சூழல் காத்து தேசம் காத்திருவீர்

முல்லைத்தீவுக்கிளைத் திறப்பு -

மருதம் வாணிபம்

மீள் குடியமரும் முல்லை
வாழ் மக்களின் நலன் கருதி
மருதம் வாணிபம் தனது புதியதொரு
கிளையினை முல்லை நகரில் இன்று
04.06.2003ஆம் நாள் காலை
10.00 மணிக்குத் தொடங்குகின்றது

குறைந்த விலையில்
01. பல்வகைப் பொருட்கள்.
02. கட்டடப் பொருட்கள்
என்பவற்றை நிறைந்த நிறைவுடன்
பெற்றுக்கொள்ளலாம்.

(சி-8137)

ஆளுகை

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 04ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.